**Minutes of Public Hearing conducted on 07/10/2025 at 11:00 A.M. at Nambi Mahal,Madurai old bypass road, Gangaikondan, Tirunelveli District with respect to the proposed Rough stone and Gravel Quarry by Thiru. S.Vellapandi over an extent of 2.18.15 Ha at S.F. No. 575(P) of Pirancheri Village, Manur Taluk, Tirunelveli District**

**Details of participants in this meeting.**

| | | |
|---|---|---|
| 1. Thiru.P.Valli Kannu | - | Revenue Divisional Officer (i/c)<br>Tirunelveli |
| 2. Er.D.M.Krishnababu.,M.E | - | District Environmental Engineer,<br>TNPC Board, Tirunelveli. |
| 3. Thiru.V.Chelladurai | - | Tahsildar, Manur |
| 4. Er.J.Jeya Priya.,M.E | - | Assistant Engineer,<br>O/o.District Environmental Engineer,<br>TNPC Board, Tirunelveli. |

Public and Government Officials – 146 Nos Copy of Attendence (Annexure-1)

The public hearing under EIA Notifications, 2006 for the proposed Rough stone and Gravel Quarry by Thiru. S.Vellapandi over an extent of 2.18.15 Ha at S.F. No. 575(P) of Pirancheri Village, Manur Taluk, Tirunelveli District was conducted on 07/10/2025 at 11.00 A.M at Nambi Mahal, Madurai old bypass road, Gangaikondan, Tirunelveli District.

The District Environmental Engineer, Tamil Nadu Pollution Control Board, Tirunelveli welcomed the Revenue Divisional Officer (i/c),Tirunelveli, public, government officers and industry representatives who came to attend the public hearing. He informed that the arrangements for the public hearing had been done as per the guidelines issued under EIA Notifications, 2006. In this regard, public notices were already published in "Dinathanthi" & "The New Indian Express" on 02/09/2025 and also announcement made to the public through vehicle announcement and distributing pamphlets.

He also stated that the views, suggestions and queries of the public will be recorded through videography and the same will be sent to the State Environment Impact Assessment Authority (SEIAA), Tamil Nadu for taking further actions.

Then, the Revenue Divisional Officer (i/c), Tirunelveli welcomed the public and has requested to express their views on the proposed project alone shortly and clearly.

Then the Environmental consultant had explained the project of Thiru.S. Vellapandi Rough Stone and Gravel Quarry to the public through a Power Point Presentation.

Then, the District Environmental Engineer has requested the public to express their views one by one on the project orally or in writing and also informed that the public views are recorded and will be sent to the SEIAA.

Subsequently, the public has started expressing their views with respect to the project as follows.

**Mrs. Guruvammal, Attikulam, Tirunelveli :-**

She said that she is living in good status because of working in the quarry of proponent and also said that she did not know any other profession except quarrying. So she requested to give permission for this quarry.

**Mr. Pechimuthu, Paruththikulam :-**

He said that he was thankful for this proposed quarry and requested to operate this quarry without affecting the goat, cows and agriculture.

**Mr. Sakthivel, Thadiyampatti :-**

He said that he did not have any problem with the establishment of this quarry as it gives employment and also told that he did not know any other job expect quarrying. So he requested to give permission for this quarry.

**Mr. Murugesan, Sitthar Chatram :-**

He said that he has been working with proponent for more than 15 years. Due to this quarry, we can get employment, food and also gets permanent job. The village people gets benefited by getting gravel, stone and M-sand for less price. So he requested to give permission for this quarry.

**Mr. Marimuthu, Rajaputhukudi :-**

He said that he has been working with proponent for more than 10 years and his village people are getting gravel, stone and M-sand for less price and requested to give permission for this quarry.

**Mr. Emarajan, Rajaputhukudi:-**

Mr. Emarajan said that there are about 12 wells near this proposed quarry and due to the operation of this quarry, the agriculture that depends on these wells will be affected. Also he said that if the quarry gets operated, water level of his well, which is located next to the proposed site, will also get decrease and the agriculture and environment will get affected due to dust emission from vehicle movement. So he told not to give permission to this quarry.

**Mr. P. Murugan, Rajaputhukudi:-**

Mr. Murugan said that he lives in Duraiyur and his farm land is located adjacent to the proposed quarry location in Prancheri village and practices organic farming there. During March month, workers in his farms were asked to vacate immediately, saying that they are going to use explosive in the quarry and questioned how to practice organic farming in such situation.

He further stated that he is carrying out organic farming in consultation with Horticultural and Natural organic farming department and also given a petition with details of crops planted and proposed to plant and also the benefits that will be provided to the general public and recorded that the petition was not acknowledged. He requested to take all these facts in consideration while giving permission, otherwise the government should take the responsibility, if any issues happened.

After that, 139 numbers of written petitions were received based on the announcement of District Environmental Engineer, to submit written petition if any, because of no other public came forward to record their views.

**திரு.எமராஜன், இராஜாபுதுக்குடி :-**

திரு.எமராஜன் அவர்கள் பேசுகையில் இந்த குவாரியின் அருகில் சுமார் 12 கிணறுகள் அமைந்துள்ளதாகவும், இக்குவாரி செயல்பட்டால் கிணறுகளை நம்பி இருக்கும் விவசாயம் பாதிக்கப்படும் எனவும், மேலும் இக்குவாரி செயல்பட்டால் அருகிலுள்ள தனது விவசாய கிணற்றில் தண்ணீர் குறைந்து விவசாயம் பாதிப்படையும் எனவும், சுற்றுச்சூழல் மாசுப்படும் எனவும், வாகன போக்குவரத்தால் தூசி படியும் எனவும் அதனால் இக்கல்குவாரி எங்கள் பகுதிக்கு வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

**திரு.P.முருகன், இராஜாபுதுக்குடி :-**

திரு. முருகன் அவர்கள் பேசுகையில், தான் துறையூரில் வசித்து வருவதாகவும் ஆனால் தனது தோட்டமானது பிராஞ்சேரி கிராமத்தில் குவாரி அமையவுள்ள இடத்தில் அருகிலே உள்ளதாகவும், அதில் இயற்கை விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் கூறுகையில் கடந்த மார்ச் மாதம் தனது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்களை குவாரியில் வெடி வைப்பதாக கூறி உடனடியாக வெளியேறும் படி தெரிவித்தாகவும், இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் எவ்வாறு இயற்கை விவசாயம் செய்ய முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும், அவர் தோட்டக்கலை மற்றும் இயற்கை விவசாய துறை ஆகியவற்றிலிருந்து ஆலோசனை பெற்று விவசாயம் செய்து வருவதாகவும், அங்கு நடப்பட்ட மற்றும் நடுவதற்கு உத்தேசித்துள்ள பயிர்களின் விவரங்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் செய்யப்போகும் உதவிகள் குறித்த விவரங்களை மனுவாக சமர்ப்பித்துள்ளதாகவும், ஆனால் அதை பெற்றுக்கொண்டதற்கான கையெழுத்திட மறுத்து விட்டதாகவும் தெரிவித்தார். மேலும், தனது கருத்துகளை கருத்தில் எடுத்துக்கொள்ளுமாறும், இல்லையேல் ஏற்படும் விளைவுகளுக்கு அரங்சாகமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்,

அதை தொடர்ந்து, வேறு யாரும் கருத்துகள் கூற வராததால், எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூறியதை தொடர்ந்து 42 மனுக்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அனைத்தும் முறையாக பதிவு செய்யப்பட்டு, அதன் குறிப்புகளும், வீடியோவும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்ததுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு)
திருநெல்வேலி.

இணைப்புகள்:

1. வருகைப் பதிவேடு நகல் (மொத்தம் – 18 பக்கங்கள், 146 நபர்கள்).
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 42 எண்ணங்கள்.

**திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், பிராஞ்சேரி கிராமம், புல எண். 575 (பகுதி) விஸ்தீரணம் 2.18.15 ஹெக்டேர், பரப்பளவில் அமையவுள்ள திரு. S.வெள்ளபாண்டி அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 07/10/2025 அன்று காலை 11.00 மணியளவில் திருநெல்வேலி மாவட்டம், கங்கைகொண்டான், மதுரை பழைய பை பாஸ் சாலையில் அமைத்துள்ள நம்பி மஹாலில் வைத்து நடைபெற்ற பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்தின் குறிப்புகள்.**

**இக்கூட்டத்தில் பங்கு பெற்றவர்களின் விபரம்**

| | | | |
|---|---|---|---|
| 1. | திரு. P. வள்ளிக்கண்ணு, | – | வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு)<br>திருநெல்வேலி. |
| 2. | திரு து.மு. கிருஷ்ணபாபு, எம்.இ., | – | மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |
| 3. | திரு.வே.செல்லத்துரை | – | வட்டாட்சியர்,<br>மானூர் |
| 4. | திருமதி.ஜே.ஜெய பிரியா, எம்.இ., | – | உதவி பொறியாளர்,<br>மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அலுவலகம்,<br>தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,<br>திருநெல்வேலி. |

பொது மக்கள் மற்றும் தொழிற்சாலை பிரதிநிதிகள் 146 நபர்கள் (பட்டியல் இணைக்கப்பட்டுள்ளது.)

*********

திருநெல்வேலி மாவட்டம், மானூர் வட்டம், பிராஞ்சேரி கிராமம், புல எண். 575 (பகுதி) விஸ்தீரணம் 2.18.15 ஹெக்டேர், பரப்பளவில் அமையவுள்ள திரு. S.வெள்ளபாண்டி அவர்களின் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி திட்டம் குறித்து 07/10/2025 அன்று காலை 11.00 மணியளவில் துவங்கியது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு தலைமையேற்க வருகை புரிந்த வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு) அவர்களையும், கருத்துக்கேட்பு கூட்டத்திற்கு பங்கேற்க வந்த பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரையும் வரவேற்றார். மேலும் இந்தக் கூட்டத்திற்கான ஏற்பாடுகள் சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கை 2006–ல் குறிப்பிடப்பட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார். இந்த பொது மக்கள் கருத்துக் கேட்பு கூட்டம் நடைபெறும் விபரம் குறித்து 02/09/2025 அன்று "தினத்தந்தி" மற்றும் "நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்" நாளிதழ்களில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்ததை சுட்டிக் காட்டினார். அதன்பின் மக்கள் கருத்துக்கேட்பு கூட்டம் நடத்துவது தொடர்பாக பொது மக்களுக்கு கடந்த வாரம் துண்டு பிரசுரங்கள், வாகன பிராச்சாரம் மூலம் அறிவிப்பு செய்ததை கூறினார்.

மேலும், இத்திட்டம் தொடர்பாக நடைபெறும் கருத்துக்கேட்பு கூட்ட நடவடிக்கைகள் வீடியோகிராபி மூலம் பதிவுசெய்யப்பட்டு, இக்கூட்டத்தின் குறிப்புகளுடன் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு மேல் நடவடிக்கைகாக அனுப்பி வைக்கப்படும் எனத் தெரிவித்தார்.

தொழிற் திட்டம் தொடர்பான விளக்கங்களை, தொழிற் நிறுவனம் சார்பில் பொதுமக்களிடம் விளக்குமாறு கேட்டுக்கொண்டு, விளக்கத்திற்கு பின் பொது மக்கள் தங்கள் கருத்துகளை தெரிவிக்கலாம் என கூறினார்.

அதனை தொடர்ந்து மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் அவர்கள், பொது மக்கள் இத்திட்டம் குறித்த தங்களது கருத்தினை வாய்மொழியாகவோ, எழுத்து பூர்வமாகவோ அளிக்கலாம் எனவும் திட்டம் குறித்த கருத்தினை கூற விரும்புகிறவர்கள் ஒருவர் பின் ஒருவராக தங்களுடைய பெயர் மற்றும் ஊரினை விவரமாக தெரிவித்து பொதுமக்கள் தங்கள் கருத்துக்களை பதிவு செய்யுமாறு கேட்டுக்கொண்டார்.

அதனை தொடர்ந்து கோட்டாட்சியர் (பொறுப்பு) திருநெல்வேலி அவர்கள் பொது மக்கள் அனைவரையும் வரவேற்று, பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி தொடர்பான தங்களது கருத்துகளை மட்டும் சுருக்கமாகவும், தெளிவாகவும் தெரிவிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

அதன்பின் திரு. S.வெள்ளபாண்டி அவர்களால் உத்தேசிக்கப்பட்ட கல் மற்றும் கிராவல் குவாரி நிறுவனத்தின் சுற்றுச்சூழல் ஆலோசகர், இத்திட்டம் தொடர்பாக புள்ளிவிளக்க காட்சி (Power Point Presentation) மூலம் பொதுமக்களுக்கு விவரித்தார்.

பின்னர், இக்கூட்டத்தில் உத்தேசிக்கப்பட்ட தொழிற்திட்டம் குறித்து, வாய்மொழியாக பொதுமக்களால் வழங்கப்பட்ட கருத்துக்கள் பின்வருமாறு,

**திருமதி.குருவம்மாள், அத்திகுளம் :-**

திருமதி.குருவம்மாள் அவர்கள் பேசுகையில், குவாரி உரிமையாளரிடம் வேலை செய்து நல்ல நிலைமையில் உள்ளதாகவும், கல்குவாரி தொழில் தவிர வேறு எந்த தொழிலும் தங்களுக்கு தெரியாது எனவும், எனவே இந்த கல்குவாரிக்கு அனுமதி வழங்கும் படியும் கேட்டுக்கொண்டார்.

**திரு. பேச்சிமுத்து, பருத்திகுளம் :-**

திரு. பேச்சிமுத்து அவர்கள் பேசுகையில், இந்த கல்குவாரி வருவதற்கு நன்றி தெரிவிப்பதாகவும், ஆடு, மாடுகள் மற்றும் விவசாயத்திற்கு பாதிப்பு அடையாதவாறு குவாரியானது செயல்படுமாறும் கேட்டுக்கொண்டார்.

**திரு.சக்திவேல், தடியம்பட்டி :-**

திரு. சக்திவேல் அவர்கள் பேசுகையில், இந்த கல்குவாரி அமைவதால் தனக்கு பிரச்சனையில்லை எனவும், இதனால் வேலைவாய்ப்பு கிடைப்பதாகவும், வேறு வேலைகள் தனக்கு தெரியாது எனவும், ஆகவே இந்த கல்குவாரி அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

**திரு.முருகேசன், சித்தார் சத்திரம் :-**

திரு. முருகேசன் அவர்கள் பேசுகையில், தான் குவாரி உரிமையாளரிடம் 15 வருடங்களுக்கு மேல் வேலை செய்வதாகவும், குவாரியினால் வேலை கிடைத்ததாகவும், குடும்பத்தினருக்கு சாப்பாடு கிடைப்பதாகவும், மேலும் நிரந்தர வேலை கிடைப்பதாகவும், ஊர் மக்களுக்கு ஜல்லி, கல் மற்றும் எம்-சாண்ட் விலை மலிவாக தருவதாகவும், அதனால் பலன் அடைந்ததாகவும் கூறினார். மேலும் இக்கல்குவாரிக்கு அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

**திரு.மாரிமுத்து, இராஜாபுதுக்குடி :-**

திரு. மாரிமுத்து அவர்கள் பேசுகையில், தான் குவாரி உரிமையாளரிடம் 10 வருடங்களுக்கு மேல் வேலை செய்வதாகவும், தங்கள் பகுதி மக்களுக்கு சரலை, ஜல்லி, கல் மற்றும் எம்-சாண்ட் ஆகியவற்றை விலை குறைவாக தருவதாகவும், மேலும் இக்கல்குவாரிக்கு அனுமதி வழங்கும்படி கேட்டுக்கொண்டார்.

**திரு.எமராஜன், இராஜாபுதுக்குடி :-**

திரு.எமராஜன் அவர்கள் பேசுகையில் இந்த குவாரியின் அருகில் சுமார் 12 கிணறுகள் அமைந்துள்ளதாகவும், இக்குவாரி செயல்பட்டால் கிணறுகளை நம்பி இருக்கும் விவசாயம் பாதிக்கப்படும் எனவும், மேலும் இக்குவாரி செயல்பட்டால் அருகிலுள்ள தனது விவசாய கிணற்றில் தண்ணீர் குறைந்து விவசாயம் பாதிப்படையும் எனவும், சுற்றுச்சூழல் மாசுப்படும் எனவும், வாகன போக்குவரத்தால் தூசி படியும் எனவும் அதனால் இக்கல்குவாரி எங்கள் பகுதிக்கு வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

**திரு.P.முருகன், இராஜாபுதுக்குடி :-**

திரு. முருகன் அவர்கள் பேசுகையில், தான் துறையூரில் வசித்து வருவதாகவும் ஆனால் தனது தோட்டமானது பிராஞ்சேரி கிராமத்தில் குவாரி அமையவுள்ள இடத்தில் அருகிலே உள்ளதாகவும், அதில் இயற்கை விவசாயம் செய்து வருவதாகவும் தெரிவித்தார். மேலும் கூறுகையில் கடந்த மார்ச் மாதம் தனது தோட்டத்தில் வேலை செய்துகொண்டிருந்தவர்களை குவாரியில் வெடி வைப்பதாக கூறி உடனடியாக வெளியேறும் படி தெரிவித்தாகவும், இப்படிப்பட்ட சூழ்நிலை இருந்தால் எவ்வாறு இயற்கை விவசாயம் செய்ய முடியும் எனவும் கேள்வி எழுப்பினார்.

மேலும், அவர் தோட்டக்கலை மற்றும் இயற்கை விவசாய துறை ஆகியவற்றிலிருந்து ஆலோசனை பெற்று விவசாயம் செய்து வருவதாகவும், அங்கு நடப்பட்ட மற்றும் நடுவதற்கு உத்தேசித்துள்ள பயிர்களின் விவரங்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் செய்யப்போகும் உதவிகள் குறித்த விவரங்களை மனுவாக சமர்ப்பித்துள்ளதாகவும், ஆனால் அதை பெற்றுக்கொண்டதற்கான கையெழுத்திட மறுத்து விட்டதாகவும் தெரிவித்தார். மேலும், தனது கருத்துகளை கருத்தில் எடுத்துக்கொள்ளுமாறும், இல்லையேல் ஏற்படும் விளைவுகளுக்கு அரங்சாகமே பொறுப்பேற்க வேண்டும் எனவும் தெரிவித்தார்,

அதை தொடர்ந்து, வேறு யாரும் கருத்துகள் கூற வராததால், எழுத்து பூர்வமான மனுக்கள் இருந்தால் அளிக்கலாம் என மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூறியதை தொடர்ந்து 42 மனுக்கள் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தில் அளிக்கப்பட்டது.

இறுதியில், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர், திருநெல்வேலி அவர்கள் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகள் அனைத்தும் முறையாக பதிவு செய்யப்பட்டு, அதன் குறிப்புகளும், வீடியோவும் மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு ஆணையத்திற்கு தக்க நடவடிக்கைக்கு அனுப்பப்படும் என்று தெரிவித்ததுடன் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

அத்துடன் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டம் நிறைவு பெற்றது.

மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர்,
தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,
திருநெல்வேலி

வருவாய் கோட்டாட்சியர் (பொறுப்பு)
திருநெல்வேலி.

இணைப்புகள்:

1. வருகைப் பதிவேடு நகல் (மொத்தம் – 18 பக்கங்கள், 146 நபர்கள்).
2. பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டத்தின் வீடியோ (ஒலி மற்றும் ஒளி) பதிவு.
3. பத்திரிக்கைச் செய்தி நகல்கள் (தமிழ் மற்றும் ஆங்கிலம்).
4. கருத்து கேட்பு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து எழுத்துப்பூர்வமாக பெறப்பட்ட மனுக்கள் – 42 எண்ணங்கள்.